# பத்திரிகை செய்தி

தென்காசி மாவட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளி சத்துணவு மையங்களில் கீழ்காணும் விவரப்படி காலியாக உள்ள சத்துணவு பணியாளர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட உள்ளதால் **தகுதியுள்ள பெண்களிடமிருந்து** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலியாக உள்ள பணியிடங்கள் விபரம்**

| வ. எண் | வட்டாரத்தின் பெயர் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | அமைப்பாளர் | சமையலர் | சமையல் உதவியாளர் |
| 1 | ஆலங்குளம் | 20 | 13 | 22 |
| 2 | கடையம் | 20 | 10 | 36 |
| 3 | கடையநல்லூர் | 11 | 1 | 24 |
| 4 | கீழப்பாவூர் | 25 | 9 | 18 |
| 5 | குருவிகுளம் | 15 | 1 | 20 |
| 6 | மேலநீலிதநல்லூர் | 14 | 10 | 17 |
| 7 | சங்கரன்கோவில் | 9 | 1 | 11 |
| 8 | செங்கோட்டை | 2 | 6 | 3 |
| 9 | தென்காசி | 9 | 1 | 6 |
| 10 | வாசுதேவநல்லூர் | 16 | 24 | 29 |
| 11 | கடையநல்லூர் நகராட்சி | 0 | 0 | 0 |
| 12 | தென்காசி நகராட்சி | 2 | 1 | 1 |
| 13 | புளியங்குடி நகராட்சி | 0 | 0 | 0 |
| 14 | சங்கரன்கோவில் நகராட்சி | 5 | 0 | 2 |
| | **மொத்தம்** | **148** | **77** | **189** |

**விண்ணப்பிக்க தகுதிகள்:**

**1.சத்துணவு அமைப்பாளருக்கான கல்வித்தகுதி:** (31.08.2020 அன்று) பொது பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பழங்குடியினர் எட்டாம் வகுப்பு (8-ம் வகுப்பு) தேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும்.

**2.சத்துணவு சமையலருக்கான கல்வித்தகுதி:** (31.08.2020 அன்று) பொது பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் எட்டாம் வகுப்பு (8-ம் வகுப்பு) தேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும். பழங்குடியினர் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

**3.சத்துணவு சமையல் உதவியாளருக்கான கல்வித்தகுதி:** (31.08.2020 அன்று) பொது பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் ஐந்தாம் வகுப்பு (5-ஆம் வகுப்பு) தேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும். பழங்குடியினர் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

**4.வயது வரம்பு :** (31.08.2020 அன்று)

| **பிரிவு** | **அமைப்பாளர்** | **சமையலர்** | **சமையல் உதவியாளர்** |
|---|---|---|---|
| **பொது பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் (SC)** | 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். | 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். | 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| **பழங்குடியினர்** | 18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். | 18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். | 18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| **விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர்** | 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். | 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். | 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| **மாற்றுத் திறனாளிகள்** | அதிகபட்ச வயது வரம்பு 43 ஆகும். | தகுதியில்லை. | தகுதியில்லை. |

**5.தூரச்சுற்றளவு:** நியமன பணியிடத்திற்கும் விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே உள்ள தூரம் 3 கி.மீ-க்குள் இருக்கவேண்டும். (ஊராட்சி / குக்கிராமம் / வருவாய் கிராமம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது).

6. **இனசுழற்சி:** அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் (Minority) பள்ளிகளுக்கு இன சுழற்சி முறை பின்பற்றப்படமாட்டாது. ஊராட்சி ஒன்றியம் / நகராட்சிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறுபான்மையற்ற பள்ளிகளுக்கு அரசாணையின்படி இனச்சுழற்சி முறை பின்பற்றப்படும்.

இனசுழற்சி அல்லாத மற்றும் இனசுழற்சி முறையிலான இடஒதுக்கீட்டின்படி நிரப்பப்பட உள்ள மொத்த பள்ளி சத்துணவு பணியாளர்கள் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் மாதிரி விண்ணப்ப படிவம் ஆகியவை www.tirunelveli.nic.in என்ற இணையதளத்தில் அல்லது சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி அலுவலக விளம்பர பலகையில் அறிவிக்கப்படும்.

**7. பணியிடங்களுக்கான ஊதியக்கட்டு :**

**அடிப்படை ஊதியம் :**

| **பிரிவு** | **ஊதிய விவரம்** |
|---|---|
| **சத்துணவு அமைப்பாளர்** | Pay Matrix Level –4 Minimum Rs-7700- Maximum Rs-24200 |
| **சத்துணவு சமையலர்** | Pay Matrix Level –2 Minimum Rs-4100- Maximum Rs-12500 |
| **சத்துணவு சமையல் உதவியாளர்** | Pay Matrix Level –1 Minimum Rs-3000- Maximum Rs-9000 |

**8.** விண்ணப்ப படிவத்துடன் கல்விச் சான்று, வயது சான்று, இருப்பிடச் சான்று சாதிச் சான்று மற்றும் முன்னுரிமை தகுதிகளுக்கான சான்று ஆகியவற்றின் நகல்களுடன் **28.09.2020-ம்** தேதி முதல் **06.10.2020** தேதி வரையிலான நாட்களில் மட்டும் (ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர) சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி அலுவலகத்தில் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இருப்பிடச் சான்றுக்கு** குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, வருவாய்த்துறை சான்று, ஆதார் அட்டை ஆகிய ஏதாவது ஒரு சான்றினை இணைக்கலாம்.

**இருப்பிடச் சான்றுக்கு** குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, வருவாய்த்துறை சான்று, ஆதார் அட்டை ஆகிய ஏதாவது ஒரு சான்றினை இணைக்கலாம்.

**முன்னுரிமை தகுதிகளுக்கான சான்றுகள் விபரம்:**

a) ஆதரவற்ற விதவை என்பதற்கான சான்று

b) கணவரால் கைவிடப்பட்டவர் என்பதற்கான சான்று

c) கலப்பு மணம் புரிந்தவர் என்பதற்கான சான்று

d) . மாற்றுத்திறனாளி என்பதற்கான சான்று

e) தமிழ் மொழிக்காவலர்/ சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுதாரர் என்பதற்கான சான்று

f) தாயகம் திரும்பினோர்/இலங்கை அகதிகள் என்பதற்கான சான்று

g) அரசுநிலம் வழங்கியதால் பாதிக்கப்பட்டோர் என்பதற்கான சான்று

h) முன்னாள்/ இந்நாள் ராணுவத்தில் பணிபுரிந்தவரைச் சார்ந்த குடும்ப உறுப்பினர் என்பதற்கான சான்று

**இப்பணிக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க இயலும் என்பதால் முன்னாள் இராணுவத்தினருக்கான இனசுழற்சி ஒதுக்கீட்டின் கீழ் முன்னாள் இராணுவத்தினரின் குடும்பத்தை சார்ந்த பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க இயலும்.**

**இப்பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது. மேலும் மேற்படி பணியிடங்கள் அரசு விதிமுறைகளின்படியும், மாண்புமிகு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் தீர்ப்புகளுக்குட்பட்டும் நிரப்பப்படும்.**

நிரப்பப்பட உள்ள காலியிடங்களுக்கு பெறப்படும் விண்ணப்பங்களில் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் நேர்காணல் அழைப்புக்கடிதம் அனுப்பப்படும். நேர்காணலுக்கு வரும்பொழுது அசல் நேர்காணல் அழைப்புக் கடிதம் மற்றும் அசல் சான்றுகள் தவறாது எடுத்து வரவேண்டும்.